# TNPSC GROUP II MAIN EXAM 2023

## WALKIN TEST

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

1. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

   1. திருவள்ளுவரின் கல்வி சிந்தனைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக
   2. திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல் என்பதை நிறுவுக
   3. திருக்குறள் ஒரு தேசிய நூல் எனக்கூற காரணங்கள் யாது?
   4. இன்றைய சமூக அரசியல் பொருளாதார நிகழ்விற்கு திருக்குறள் எங்ஙனம் உதவுகிறது? சான்றுடன் விளக்குக.
   5. ‘‘திருக்குறள் ஓர் அறநூல்’’ – சான்று தந்து விளக்குக.

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

தமிழகத்தில் உள்ள கோயில்கள் தோறும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இத்திருவிழாக்களில் தெய்வங்களைத் தேரில் அமர வைத்து ஊர்வலமாக அழைத்து வருவது முக்கிய நிகழ்வாகும். ஒவ்வொரு கோயில் திருவிழாவிலும் தேர்த்திருவிழா குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். பத்து நாள்கள் நடைபெறும் திருவிழாவின் இறுதி நாளில் மஞ்சள் நீராட்டிற்கு முதல் நாள் தேரோட்டம் நடைபெறும். முதன்மைத் தெய்வத்திற்குப் பெரிய தேரும், பிற தெய்வங்களுக்குச் சிறிய தேரும் இருக்கும்.

தேரில் இணைக்கப்பட்டுள்ள பெரிய கயிறுகளை ‘‘வடம்’’ என்று கூறுவர். இவ்வடத்தை பற்றி இழுத்துச் செல்வதை ‘‘வடம் பிடித்தல்’’ என்பர். கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட முடியாதவர்களான முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் போன்றவர்களுக்கு உதவும் வகையிலும் அனைவரும் ஒன்றுகூடி வழிபாடு செய்யவும் இறைவனை வீதி உலாவாக அழைத்து வருவர். இவ்வாறு இறைவன் தன்னை நாடி வந்த அடியவர்களுக்கு அருள் புரிவதோடு, தான் அவர்களை நாடிச் சென்றும் அருள்புரிவார் என்பதைத் தேர்த்திருவிழா உணர்த்துகிறது.

திருவாரூரில் தியாகராசப் பெருமான் கோயில் கொண்டுள்ளார். இக்கோயிலின் தேர் ஆசியாவிலேயே மிக உயரமான தேர் என்ற பெருமைக்கு உரியது. இத்தேர் ஒரு அடி உயரமும் 360 டன் எடையும் கொண்டது. நான்கு நிலைகளைக் கொண்டதாக உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் இக்கோயிலின் தேர்த் திருவிழா கொண்டாடப்படுகிறது.

‘‘கீழை நாடுகளின் லூர்து நகர்’’ என அழைக்கப்படுவது வேளாங்கண்ணி ஆகும். வேளாங்கண்ணி மாதா தேர்த்திருவிழா அனைத்து சமய மக்களும் கலந்து கொள்ளும் ஒரு விழாவாகும்.

இராமாயணம் மகாபாரதம் போன்ற புராணக்கதைகளையும் சமுதாயத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளையும் சிற்பங்களாகச் செதுக்கித் தேரை அழகுபடுத்துவர். எனவே, தேர் என்பது நடமாடும் கலைக்கருவூலமாகத் திகழ்கிறது. தமிழகத்தில் திருவாரூர், பழனி, அவினாசி, திருவில்லிபுத்தூர், சிதம்பரம், கும்பகோணம், மதுரை, திருவல்லிக்கேணி, திருவரங்கம், திருவண்ணாமலை, திருநெல்வேலி போன்ற இடங்களில் நடைபெறும் தேர்த்திருவிழாக்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

**வினாக்கள்**

1. வடம் பிடித்தல் - என்றால் என்ன?
2. ஆசியாவிலேயே மிக உயரமான தேர் என்ற பெருமைக்கு உரிய தேர் எது?
3. திருவாரூர் தியாகராசப் பெருமான் கோயில் ஆழித்தேரின் உயரம், எடை எவ்வளவு?
4. ‘‘கீழை நாடுகளின் லூர்து நகர்’’ என்றழைக்கப்படும் ஊர் எது?
5. நடமாடும் கலைக் கருவூலமான தேரை எவ்வாறு அழகுபடுத்துவர்?

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்**

3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

## கட்டடக்கலை

தமிழகத்தில் உள்ள வீடு, மாளிகை, அரண்மனை, கோயில்கள் போன்றவை தமிழகக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன. இவற்றுள் கோயிலகளே காலத்தைக் கடந்து தமிழரின் கட்டடக்கலைக்குச் சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன. சங்ககாலம் தொட்டே முறையாகக் கட்டடங்களை அழகுற அமைப்பதற்கான 'மனை நூல்கள்' இருந்தன. இதனை 'நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம்' என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.

பழங்காலத்தில் கோயில்கள் மரத்தினால் கட்டப்பட்டன. இதற்குச் சான்றாகச் சிதம்பரம் நடராசர் கோயிலில் உள்ள சபாநாயகர் மண்டபத்தை இன்றும் காணலாம். மரக்கட்டடங்கள் இயற்கையினால் அழிந்துவிடும் தன்மை உடையன. இதன் மேற்பகுதி விரைவில் பழுதாகிவிடும். அதனால் இவை செம்பு, வெள்ளி, பொன் தகடுகளால் வேயப்பட்டன. மரக்கட்டடங்களோடு களிமண் கட்டடங்களும் தோன்றின. களிமண் கட்டடங்களின் மேற்கூரைகள் மரத்தால் வேயப்பட்டு இருந்தன. பின்னர் மரக்கட்டடங்களும் களிமண் கட்டடங்களும் சுடுமண்ணால் கட்டப்பட்ட உயர்ந்த கட்டடங்களாக மாறின. சங்க காலத்தில் சட்ட செங்கற்களால் கட்டப்பட்ட ஆன கட்டடங்களைத் தமிழகத்தில் காணலாம். செங்கல் கோயில்கள் மரக் கோயில்களை விட உறுதியாகவும் நீடித்த தன்மை உடையனவாகவும் விளங்கின. பொ.ஆ.ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கோயில்கள் எல்லாம் செங்கல் கட்டடங்களாகவே இருந்தன. இவை மன்னர்களால் அவ்வப்போது செப்பனிடப்பட்டன.

பெரிய பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டவை குடைவரைக் கோயில்கள் ஆகும். இவை கருவறை, முன் மண்டபம், தூண்கள் என்ற அமைப்பைக் கொண்டிருந்தன. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னுமிடத்தில் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரவர்ம பல்லவன், முதல் குடைவரைக் கோவிலை அமைத்தான். முற்காலப் பாண்டியர்கள் அமைத்த முதல் குடைவரைக் கோயில் பிள்ளையார்பட்டி குடைவரைக் கோயில் ஆகும். குடைவரைக் கோயில்கள் நீண்ட மண்டபம் போன்ற அமைப்பைப் பெற்றிருந்தன. எனவே 'மண்டபக் கோயில்கள்' என்றும் பாறைகளைக் குடைந்து அமைத்ததால் 'பாறைக் கோயில்கள்' என்றும் அழைக்கப்பட்டன.

ஒரே கல்லினால் ஆன ஒற்றைக்கல் கோயில்கள் தமிழகத்தில் காணப்படுகின்றன. இவற்றை அமைக்க, பாறைகளை மேலிருந்து படிப்படியாகக் கீழே செதுக்கிக் கோயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் மாமல்லபுரத்தில் ஒற்றைக்கல் கோயில்கள் அமைந்துள்ளன. கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிச் சுண்ணம் சேர்க்காமல் கட்டப்படும் கட்டடங்களுக்குக் 'கற்றளிகள்' என்று பெயர். கி.பி.ஏழாம் நூற்றாண்டில் நரசிம்மவர்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. மாமல்லபுரம், காஞ்சிபுரம், பனமலை ஆகிய ஊர்களில் காணப்படும் கற்றளிகள் காலத்தால் முந்தையவை. கி.பி.எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய கட்டங்களில், பெரும்பான்மை கற்றளிகளாகவே இருந்தன. பிற்காலச் சோழர்கள் செங்கற்களால் ஆன பழைய கோயிற்களைக் கற்றளிகளாக மாற்றினர்.

APOLLO STUDY CENTRE

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

4. **பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

உயிர்வாழ்வதற்கு அடிப்படை – உணவு வரையறை – உணவு பாதுகாப்பு – கலப்படம் - கார்போ ஹைட்ரேட்டுகள் - புரதங்கள் - கொழுப்புகள் - வைட்டமின்கள் - தாது உப்புகள்.

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

5. **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

நம் தினசரி உணவில் சில ஊட்டச்சத்துக்கள் நீண்ட காலம் இல்லாமல் போவதால் குறைபாட்டு நோய்கள் தோன்றுகின்றன. இந்த நிலை "ஊட்டச்சத்து குறைபாடு" என்று குறிக்கப்படுகிறது. புரதக் குறைபாடு மற்றும் ஆற்றல் குறைபாட்டால் குவாசியோர்கள் (Kwashirokar) மற்றும் மராஸ்மஸ் (Marasmus) போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

**குவாசியோர்கர்**: அதிகப்படியான புரதக்குறைபாட்டால் இந்த நோய் ஏற்படுகிறது. இந்த நோய் 1 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளைத் தாக்குகிறது. இக்குழந்தைகளின் உணவில் கார்போஹைட்ரேட்டுகள் முக்கியமாகக் காணப்படும். ஆனால் புரதங்கள் மிக மிகக் குறைந்த அளவே காணப்படும்.

**மராஸ்மஸ்:** இந்த நோய் பொதுவாக ஒரு வயதுக்குட்பட்ட பச்சிளங் குழந்தைகளைத் தாக்குகிறது. இந்த வயதில் இவர்களுடைய உணவில் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புகள் மற்றும் புரதங்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படும்.

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**6. பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Periyar was not only a great social revolutionary; he was something more than that. He is known as a great champion of the underprivileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he took up any issue he went deep into it, understood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it. Communal differences in our society were deeptooted and appeared to be permanent features of our society until Periyar came on the scene.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

அரசு முதன்மைச் செயலாளர் அவர்களால், மூன்றாம் பாலினர் நலவாரியம் என்ற பெயரை பயன்படுத்தப்படும் வாரியத்திற்கு 'திருநங்கைகள் நல வாரியம்' என்று தமிழிலும் 'Transgender Welfare Board' என்று ஆங்கிலத்திலும் பெயர் மாற்றம் செய்யப்படுதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அரசாணை பிறக்கப்படும் வகையில் அறிக்கை ஒன்றை எழுதிடுக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. வாகை சூடினான்
2. ஆயத்தம்
3. இலக்கு
4. நெறியோடு

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. பனி - பணி
2. மனம் - மணம்
3. ஆனி – ஆணி
4. ஏரி – ஏறி

**c. பிரித்து எழுதுக**

1. சுவையுணரா
2. நான்மறை
3. அன்பெனப்படுவது
4. அறிவுண்டாக

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. நாவுக்கரசி நன்கு எழுதுவாள்
2. அழைப்புமணி ஒலித்தது
3. காலம் எப்போதும் மாறும்
4. நான் பரிசு பெற்றேன்

APOLLO STUDY CENTRE

**e. பிழை நீக்கி எழுதுக**

1. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது
2. உளுவார் உழகத்தார்க்கு அச்சானி போண்றவர்
3. துண்பத்தை பொருத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்
4. மண்ணுலகில் நல்லரம் காப்பவன் தேவற்களுக்கு விறுந்தாவான்

APOLLO STUDY CENTRE